


69

# சுட்டு

நவம்பர் '86
மாத இதழ்
60 பைசா



FREE E - BOOKS , www.thamizham.net.,

## பாரதியின் புதல்வி சகுந்தலாபாரதி கூறுகிறார் :




○ ஒரு பழைய கறுப்புத் தகரப்பெட்டி, அதில் அவருடைய கையெழுத்துப் பிரதிகளும், பத்திரிகையிலிருந்து வெட்டி ஒட்டப் பட்ட வியாசங்களும் அடங்கியிருக்கும். அவற்றை எங்களுக்கு லட்ச ரூபாய் ஆஸ்தி என்று சொல்லுவார்...

○ "நான் செய்ய வேண்டியதெல்லாம் ஒரு பாட்டு. இப் பொழுது எழுதிக் கொடு" என்று கேட்டேன். உடனே 'பாப்பா பாட்டு' எழுதி கொடுத்தார்...


○ பள்ளிக் கூடங்களில் ஆங்கிலம் கற்பிப்பதால் என்னைப் பள்ளிக்கு அனுப்ப என் தந்தையார் மறுத்துவிட்டார். "அடிமை யுணர்ச்சியை உண்டாக்கும் பள்ளிக் கூடச் சரித்திரப் பாடல் கள் படிப்பதனால்தான் இளைஞர்களுக்கு தேச பக்தியேற்படு வதில்லை" என்பார்...

○ 'தமிழைப் போன்ற உன்னத பாஷை வேறில்லை. பச்சைத் தமிழிலே நினை ஆங்கிலத்தில் நினைத்துப் பின் மொழி பெயர்க் காதே' என்று தம்மிடம் வரும் நண்பர்களுக்குச் சொல்வார். தம்மையடுத்தோரும், தம் வீட்டில் உள்ளோரும் தமிழன்றி வேறு பாஷை பேச சம்மதிக்கமாட்டார்.

○ 'அல்லாத் தோட்டம்' என்ற பெயரில் ஒரு பெரியத் தோட்டம் எட்டய புரத்தில் இருக்கிறது. அங்கு ஒரு நாள் என் தந்தையார் என்னையும் என் தாயையும் அழைத்துக் கொண்டு போனார். புருஷனும் மனைவியும் கைக்கோர்த்துக் கொண்டு தெருவில் நடந்து போகும் விந்தையைக் கண்டு எட்டயபுரத் தில் பரிகசிக்க ஆரம்பித்தார்கள். அதனைப் பற்றி என் தந்தை இவ்வாறு எழுதினார்.

நாடகத்தில் காவியத்தில் காதலென்றால்
நாட்டினர்தாம் வியப்பெய்தி நன்றாமென்பர்
ஊடகத்தே, வீட்டினுள்ளே, கிணற்றோரத்தே
ஊரினில் காதலென்றால் உறுமுகிறார்.

FREE E - BOOKS , www.thamizham.net.,




FREE E - BOOKS , www.thamizham.net.,

# 55%



உலக எழுத்தறிவற்ற மக்களில் 55 சதவீதம் இந்தியர்களாகத்தான் இருப்பார்களாம். எப்போது? இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இது உலக வங்கியின் அறிக்கை.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் கல்விக்கு ஒதுக்கியது 6.33 சதவீதமாக இருந்தது. 7வது ஐந்தாண்டு திட்டத்தில் 1.2 சதவீதமாகக் குறைந்து விட்டது. இதனைப் பற்றி யாரும் அக்கறை எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. படிப்பறிவற்றவர்களே இந்தியாவில் இல்லை என்ற நிலை ஏற்பட வேண்டுமானால் அரசு விஷேச அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும் நவோதயா நாடகங்களை முதலில் நிறுத்த வேண்டும். எல்லா பள்ளிகளையும் நவீனபடுத்தி மாணவர் தரத்தை உயர்த்த வேண்டும். பள்ளி காணாத இரண்டு லட்ச கிராமங்களுக்கும் தொடக்கப் பள்ளி அமைத்து எல்லாருக்கும் கல்வி என்பதை உறுதிப்படுத்த அரசு முன்வர வேண்டும். கல்வி வளர்ச்சிக்காக மத்திய அரசின் பட்ஜெட்டில் 10 சதவீதமும், மாநில பட்ஜெட்டில் 30 சதவீதமும், ஒதுக்கப்பட வேண்டும். எங்கே ஒதுக்க முடியும்? முழு பட்ஜெட்டையே அல்லவா ராணுவத்துக்கு ஒதுக்கிவிடுகிறார்கள்.

ஏ. சி. அறையில்
டி. வி.யில்
மந்திரி பார்த்தார்—
வெள்ளத்தில்
ஆயிரம் குடிசைகள்
மூழ்கிப் போனதை

—கே. வி. ராஜேந்திரன்

**சூழ்நிலை**

தீபாவளி இனாம் கேட்டு
வந்தவர்களை
அவரால் திட்டமுடியவில்லை
தலை தீபாவளிக்கு வந்த
மாப்பிள்ளை
வீட்டில் தங்கியிருப்பதால்

—துரை சண்முகம்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# விட்டமின் 'சி'

## புதுத்தகவல்கள்

✷ சிகரெட் புகைப்பவர்களுக்கு விட்டமின் 'சி' மிக அவசியம் ஒவ்வொரு சிகரெட்டும் உடலில் 25 மி.கிராம் விட்டமின் 'சி' ஐ அழிக்கிறது.

✷ அதிகமாக புரதச்சத்துள்ள உணவு உண்பவர்களும் விட்டமின் 'சி' அதிகம் சேர்க்க வேண்டும். புரதம் உடலில் அதிகரிக்கும்போது விட்டமின் 'சி'யின் தேவையும் அதிகரிக்கிறது. கால்சியச்சத்து குறைந்தால் விட்டமின் 'சி'ஐ உடல் ஏற்காது.

✷ கன்னிப்போன, புண்ணாகும் சதை, உள் காயங்கள், பலவீனமான எலும்பு, பல், ஈறு நோய்கள், மந்தத்தனம், சோம்பேறித்தனம், கடும் களைப்பு, இவையெல்லாம் விட்டமின் 'சி' பற்றாக்குறையால் வரும் தொல்லைகள்.

✷ ஜலதோஷத்திற்கு முதலுதவி விட்டமின் 'சி' ஒரு மணிக்கு 100 மி.கி விதம் 24 மணி நேரம் தொடர்ந்து சாப்பிட்டால் ஜலதோஷம் கட்டுப்படும். தினம் 1000 மி.கி சேர்த்தால் ஜலதோஷமே அண்டாது.

✷ காய்கறிகளை வெட்டி நெடுநேரம் வெளியே வைத்தல், சூடான பாத்திரத்தில் காய்கறிகளை நெடுநேரம் பாதுகாத்தல், அதிகமாக வேக வைத்தல் இவை அவற்றிலுள்ள விட்டமின் 'சி' யின் அளவைக் குறைக்கும்.

✷ சராசரி மனிதனின் ஒரு நாளைய விட்டமின் 'சி' குறைந்தபட்ச தேவை 400 மி.கி ஒரு நாளைக்கு 2000லிருந்து 3000மி.கி வரை சேர்த்துக் கொள்பவர்களுக்கு புற்றுநோய், இதயம் தொடர்பான நோய்கள், தொற்று நோய்கள் வருவது தடுக்கப்படுகிறது என்பது அண்மை மருத்துவக் கருத்து.

✷ மிக அதிகம் விட்டமின் 'சி' உள்ளவை : கொய்யாப்பழம் (15 கிராமில் 85 மி.கி), ஆரஞ்சு (19 மி.கி), எலுமிச்சை (18 மி.கி) பப்பாளிப்பழம் (13 மி.கி), சாத்துக்குடி (11 மி.கி) தக்காளி (9 மி.கி), முட்டைக் கோசு, பச்சை காரட், உருளைக் கிழங்கு.

(அடுத்து நமது 'ஓயாமை' மருத்துவம்)

—சித்தன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சுட்டி

சுட்டியின் கொள்கையிலும் வளர்ச்சியிலும் பங்கு கொள்ள விழைகின்ற சுட்டி ஆர்வலர்களின் நெடுநாள் வேண்டுகோளின்படி சுட்டி வாசகர் இயக்கம் மலரவிருக்கிறது. சுட்டியின் மேற்பார்வையில் இந்த இயக்கத்தின் மூலமாக பலவித ஆக்கப்பணிகள் செய்ய எண்ணியுள்ளோம். சுட்டியையும், அதன் எண்ணங்களையும் மக்களிடம் சேர்க்கிற பணியை வாசகர் இயக்கங்கள் ஏற்க இருக்கின்றன.

- ✳ எந்த அரசியல் கட்சியும் உறுப்பினராகவோ, தீவிர மதவாத அமைப்புகளின் ஆதரவாளராகவோ இருத்தல் கூடாது.
- ✳ சுட்டியின் சமூகப் பார்வையில் நம்பிக்கையுடையவராகவும், எல்லாவகையிலும் சுட்டியை மேலும் முன்னோக்கி எடுத்துச்செல்லும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறவராயும் இருத்தல் வேண்டும்.
- ✳ உடனுக்குடன் கடிதத் தொடர்பு கொள்ளும் மனோபாவம், நேரந்தவறாமை, ஒழுங்குகளுக்குக் கட்டுப்படல். ஒப்புக் கொண்ட பணிகளில் இருந்து நழுவாது செயல்படல் ஆகிய பண்புகள் படைத்தவராய் இருத்தல் வேண்டும்.

மேற்கண்ட திறம்படைத்த ஆர்வலர்கள் உடனடித் தொடர்பு கொண்டால், தங்கள் பகுதிகளில் சுட்டி வாசகர் இயக்கம் அமைப்பதற்குரிய பிற விபரங்கள் தெரிவிக்கப்படும்

தொடர்புக்கு : வாசகர் இயக்க நிர்வாகி, சுட்டி 1494 அண்ணா நகர், சென்னை-600 040.

*தொடர்பு கொண்டவர்களுக்கு விரைவில் விண்ணப்பங்கள் அனுப்பப்படும்.*

## வாசகர் இயக்கம்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# இந்திராவை தாக்கும் ராஜீவ்



"எந்த அனுபவமும் இல்லாமல் நீங்கள் பிரதமர் பதவிக்கு வந்திருக்கிறீர்கள். விமானியாக பெற்ற பயிற்சியா அல்லது உங்களுடைய குடும்பப் பின்னணியா இவற்றில் எது உங்களுக்கு உதவியது?" என்று ராஜீவ் காந்தியிடம் கேட்ட போது அவர் கூறினார்:

"இரண்டு விஷயங்கள் மட்டுமே எனக்கு உதவின. ஒன்று என்னுடைய நேர்மையான மனப்போக்கு; மற்றது உண்மையான நடத்தை."

கடந்த பல வருடங்களாக ராஜீவைப்போல யாருமே நேரு, இந்திராவை இவ்வளவு கடுமையாகத் தாக்கியதில்லை.

# அபராதம்

பீகாரிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட குழந்தைகளை உத்தர பிரதேசத்தில் கம்பளி நெசவு ஆலைகளில் 22 மணி நேர வேலைக்கு நிர்பந்திக்கப்பட்ட செய்தி உச்ச நீதி மன்ற விசாரணையில் தெரிய வந்தது.

அந்த பிஞ்சு கரங்களை கொடுமைப்படுத்திய கொடூரங்களுக்கு தொழிலாளர் ஆணையாளர் விதித்த அபராதம் என்ன தெரியுமா? பயம் வேண்டாம். ரூ 30 மட்டுமே.

---

வரையிலும் இடம் பெறவில்லை. தமிழிலோ மூன்றாம் தர எழுத்தாளர்கள் சகல கௌரவங்களுக்கும் உரியவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். இது ஒரு முக்கியமான வித்தியாசம்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# பிச்சையெடுப்பவருடன்...

தினம் தினம் பல பிச்சைக்காரர்களை சந்திக்கிறோம். இவர்களைப் பற்றி நாம் சிந்தித்திருக்கிறோமா? பின்வரும் தகவல்கள் ஒரு பிச்சை எடுப்பவரை வற்புறுத்திக் கேட்கப்பட்டவை.

ஒரு நாளைக்கு 25 ரூபாயிலிருந்து 50 ரூபாய் வரை வருமானம் உண்டாம். பிச்சையெடுப்பது போட்டி மிகுந்த தொழிலாம். சம்பாதிக்கும் பணத்தை வட்டிக்கு விடுவதும், பாங்கில் போடுவதும் வழக்கமாம். இவர்களில் பலருக்கு 2 மனைவிகள் உண்டாம். தொழுநோயாளிகள் கஞ்சா, அபின் போன்ற போதை பொருள்களை கடத்தி விற்பதற்குச் சென்று விட்டதால் இவர்களுக்கு வருமானம் கொஞ்சம் உயர்ந்துள்ளதாம். சில்லறைகளை ஹோட்டல்களில் கொடுத்து கமிஷன் பெறுவார்களாம். இவர்கள் தொழிலிலும் கஷ்டங்கள் உண்டாம். கைகால் முடங்கிவிட்டது போலவும், ஊமை போலவும், நடித்து பிச்சையெடுத்தால் அன்று முழுவதும் அதே போலவே இருப்பார்களாம்.

—இப்போது... நம் கருணைகளைப் புறக்கணிப்போம். பிச்சையிடுவதை கௌரவமாகக் கருதுவதை விட்டுவிட்டு பிச்சை போட்டு பலரை சோம்பேறிகளாக்கும் மடமையைக் கொளுத்துவோம்.

—இராஜாதி

"அம்மா, தர்மம் செய், தாயே!" தமிழ் நாட்டுப் பிச்சைக்காரன்! பாரதியாரின் வாக்கு நிறைவேறிவிட்டது. தலைநகரில் (டெல்லியில்) தெருவெல்லாம் தமிழ் முழக்கம்!

—இந்திராபார்த்தசாரதியின் 'நான் கண்டேனா?' சிறுகதையில்.

வீடுகள் காலனி அமைப்பில கடன வசதிகள் ஏற்பாடு செய்து கட்டித் தரப்படும். தொடர்பு— ரேணுகாதேவி
24, திருவள்ளுவர் தெரு, இராமாபுரம்,
அம்பத்தூர். சென்னை-600 053.

FREE E - BOOKS , www.thamizham.net.,



# தாய்
## வலம்புரிஜானின்
## பைரவி பதில்கள்!

வலம்புரிஜான், வலம்புரிஜான் மட்டுமல்ல. அ.தி.மு.க எம்.பி., எம். ஜி. ஆருக்குப் பிரியமானவர் ஆர். எம். வீக்கு வேண்டியவர். நல்ல பேச்சாளர். நிரம்பித் ததும்பும் படிப்பாளி. புதுக்கவிதைகளின் ஆதரவாளர். தாய் ஆசிரியர். இலக்கியவாதி. எனவே, அவரிடம் கேட்பதற்கு நிறைய இருக்கிறது. பதில்களோடு காத்திருக்கிறார். வாசகர்களிடமிருந்து தான் ததந்த கேள்விகள் கிடைக்கவில்லை போலிருக்கிறது.

பைரவி பதில்களில் சுவையான விஷயங்கள் பேசப்பட்டும் சலிப்பூட்டுகின்றன. சாவி. அரசுவைப் போல தனித்தன்மைகள் இல்லை. பதில் கூறுவதில் பல்வகை உத்திகள் கையாளப்படுவதில்லை. இருந்தும் வாசகனுக்கு ஜீரணம் ஆகக் காரணம் ஜான் அவர்களின் சாராயம் தெளித்த சொற்கள். கவிதைத் தன்மைகள் கலந்த உரைநடை...

அபிப்ராயம் கேட்பவர்கள் நடிகைகளைப் பற்றி மிகுதியாக வினவுகிறார்கள். திரை நட்சத்திரங்களைப் பற்றி பேச வேண்டியதுதான். ஆனால், அவர்களைப் பற்றிய அறியாமையைத் தெளிவுறுத்த பைரவிக்கு அவசியமென்ன? தங்களுக்குப் பிடித்தப்பாடல் என்ன என்று அடிக்கடிக் கேட்கப்படுகிறது. இதுபோன்ற கேள்விகளைப் புறக்கணிக்க வேண்டும். மாறாக 20—04—86 இதழில் பெண்மானே சங்கீதம் பாடிவா பாடலும், 06—04—86 இதழில் பூங்காத்துத் திரும்புமா பாடலும் தமக்குப் பிடித்திருப்பதாக பதில் எழுதியிருக்கிறார்,இப்படி... கனாக்களை மட்டும் உற்பத்தி பண்ணும் வினாக்களை தவிர்த்தல் நன்று.

பைரவி பதில்களில் குறைந்த பட்சம் நான்கு கேள்வி

FREE E - BOOKS , www.thamizham.net.,

களாவது இலக்கியத்தை, எழுத்தாளர்களைப் பற்றி வருகிறது. கவிஞர்களின் மீது வெளிச்சம் நன்கு விழுகிறது. இது மகிழ்ச்சியை விதைக்கிறது. 'சாண்டில்யன் வர்ணனைக்கும் ஹேமா ஆனந்ததீர்த்தன் வர்ணனைக்கும் என்ன வித்யாசம்?'

ஒருவர் வர்ணிக்கக்கூடாத வயதில் வர்ணிக்கிறார். மற்றொருவர் வர்ணிக்கக்கூடாத வயதை வர்ணிக்கிறார் (11—06—86) —இப்படி நயம் பட உரைக்கிற இவர் வார்த்தை விரயம் செய்வதிலும் வல்லவர்: எடுத்துக்காட்டாக: அரசியல் வாதி, இலக்கியவாதி இவற்றில் எப்படிச் சொல்லிக் கொள் வதில் பெருமைப் படுகிறீர்கள்? 'மனிதன் என்று' என இரண்டு சொற்களில் பதில் தரவேண்டியதை இருபது வார்த்தைகளில் விடையளிக்கிறார்.

மனிதன் என்று என்னை அழைக்கிறபோது உண்டாகிற மகிழ்ச்சி அரசியல்வாதி என்று அழைத்தாலும் இல்லை. இலக்கியவாதி என்று அழைத்தாலும் இல்லை. மனிதனாவதற்கு மகத்தான முயற்சிகள் தேவைப் படும் (27—04—86).

வைரவியிடம் நாம் காண்பது களையமுடிகிற குறை களையே. சிறந்த கேள்விகள் தெரிவு செய்யப்பட வேண்டும். நடிகைகளை ஆய்வுப் பொருளாக்குவதை நிறுத்த வேண்டும். மற்றவர்களைத் திட்டுவதற்கும், பாராட்டுவதற்கும் களமாக்கிக் கொள்ளக்கூடாது. பதில்களை ஆழப்படுத்த, அகலப்படுத்த, அழகுப்படுத்த முயலவேண்டும். இப்படிச் செய்தால்—

வைரவிப்பதில்களின் 2 பக்கங்களைப் படிக்கிற அந்த ஆறு நிமிடங்கள் பொருள் பொதிந்ததாய் இருக்கும்.

—நா. தென்னிலவன்

(அடுத்து: சாவி பதில்கள்)


வேல்
டைப்
பௌண்டரி
● புதிய வகை 2 வண்ண அச்செழுத்துக்கள்
● எல்லா மொழி அச்செழுத்துக்கள்
● போஸ்டர் எழுத்துக்கள்
● எல்லா வித அச்சக உபகரணங்கள்


FREE E - BOOKS , www.thamizham.net.,

# ?கேள்விகள்?

இளம் கவிஞர்களுக்கு தாங்கள் கூறுவது என்ன?

**வால்ட் விட்மன் :** இளம் கவிஞனே! மண்ணையும், சூரியனையும் பிராணிகளையும் நேசி. பணத்தை லட்சியம் செய்யாதே. கேட்கிறவனுக்கெல்லாம் கொடு. அறிவில்லாதவர்கள் சார்பாகவும், பித்தர்கள் சார்பாகவும் போராடு. உன் வருமானத்தையும் உழைக்கும் சக்தியையும் பிறருக்காக செலவிடு. யதேச்சதிகாரிகளை வெறு. மக்களிடம் பொறுமையுடனும் சகிப்புத்தன்மையுடனும் நடந்து கொள். தெரிந்தோ தெரியாமலோ எதற்கும் அடிபணியாதே. தனிமனிதனோ, மனிதக் கூட்டமோ யார்க்கும் தலை வணங்காதே. படிக்காத மேதைகளிடையேயும், இளைஞர்களிடையேயும், தாய்மார்களோடும், குழந்தைகளோடும் தாராளமாகப் பேசு. பள்ளியிலோ, கோவிலிலோ, புத்தகத்திலோ உனக்குச் சொல்லப் பட்டவைகளை மறுபரிசீலனை பண்ணு. உன் ஆன்மாவை எவையெல்லாம் அகௌரவப்படுத்துகிறதோ, அதையெல்லாம் தள்ளிவிடு!

இந்தித் திணிப்பை பற்றி உங்கள் கருத்தென்ன?

**காந்திஜீ :** ஒரு லிபியையோ அல்லது ஒரு சார்பான ஹிந்தியை மட்டுமோ பலவந்தமாக எந்த மாகாணத்திலும் அல்லது எந்த ஜில்லாவிலும் அல்லது எந்த மக்களிடையிலும் திணிக்க முயல்வது தேச நன்மைக்கே பெரும் கேடு விளைவிப்பதாகவே முடிந்துவிடும்.

ஆண்களை விட பெண்கள் அறிவாளிகள் என்று கூறிவருகிறீர்களே ஆதாரம் தர முடியுமா?

**மகாகவி பாரதி :** இராமாயணத்தில் சீதை பொய் மானை மெய் மான் என்று நினைத்து ஏமாற்றம் அடைந்தாள் என்றும் எங்கள் வீட்டில் ஒரு தாத்தா நேற்று வந்து பேசிக் கொண்டு இருந்தார். அந்த சீதை சொல்லுக்குக் கட்டுப்பட்டு அதை வேட்டையாட போன ராமனுடைய புத்தியைக் காட்டிலும் அவளுக்கு புத்தி அதிகமா, குறைவா என்று நான் கேட்டேன்.

(மேற்கண்ட சிலரின் கருத்துக்களுக்குத் தக்கவாறு கேள்விகள் இணைக்கப் பட்டிருக்கின்றன)

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சிகரெட்

இந்தியாவில் வழக்கமாக சிகரெட் பிடிப்பவரின் எண்ணிக்கை 20 மில்லியனாகும். இந்த எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே வருகிறது. சராசரியாக ஒரு மனிதன் ஒரு வருடத்திற்கு 190சிகரெட்டுகள் பிடிக்கின்றான்.


இன்று இந்தியாவில் 11 லட்சம் ஏக்கர் நிலத்தில் புகையிலை விளைகின்றது. உலக புகையிலை உற்பத்தியில் இந்தியா 8% உற்பத்தி செய்கிறது. வருடத்திற்கு 440 மில்லியன் கிலோ புகையிலையை தயாரிக்கும் நமது நாடு 80% புகையிலையை நமது தேவைக்கே வைத்துக் கொள்கிறது. ஏழை இந்தியனின் தோழனான 'பீடி' ஒரு நாளைக்கு ஒரு கோடிக்கு மேல் விற்பனை ஆகிறது. பீடி சுருட்டும் தொழிலினால் மட்டும் 200,000 பேர் வேலையில் உள்ளார்கள்.

உலகத்திலேயே அதிகம் சிகரெட்டுகளை உபயோகிப்பவர்கள் சீனாவில் தான் உள்ளனர். வருடத்திற்கு 700கோடி சிகரெட்டுகளை இவர்கள் உபயோகிக்கிறார்கள். இரண்டாவதாக வரும் அமெரிக்கா 600 கோடி சிகரெட்டுகள் பிடிக்கிறார்கள்.

இவர்களுக்காகவே சில பன்னாட்டு கம்பெனிகள். இப்பொழுது தோன்றியுள்ளன சிகரெட் பிடிப்பதால் மட்டும் அமெரிக்காவில் வருடத்திற்கு 300,000 பேர் இறக்கிறார்கள். ஐரோப்பாவில் சிகரெட்டால் இறப்பவர்கள் 500,000 பேராகும்.

இத்தனை பேர் இறந்தாலும் இந்த நாட்டு அரசாங்கங்கள் இதைப் பற்றி எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. ஏனென்றால் சிகரெட்டினால் நிறைய வரி கிடைக்கின்றது.

நன்றி: அரும்பு



FREE E - BOOKS , www.thamizham.net.,

## மலையாளப் பத்திரிகையின் இமாலய வளர்ச்சியை விமர்சியுங்கள்.

மலையாளத்தில் தரமான பத்திரிகைகளும் தரமற்ற பத்திரிகைகளும் உள்ளன. மலையாள மொழியிலுள்ள தரமான பத்திரிகைகள், தமிழில் வெளிவந்து கொண்டிருக்கும் புகழ் பெற்ற பத்திரிகைகளோடு ஒப்பிடும் போது, மிக மிகத் தரமானவை. மலையாளத்தில் தரமற்ற பத்திரிகைகளோ தமிழின் தரமற்ற பத்திரிகைகளை விட மிக மிக ஆபாசமானவை.

மலையாள மொழியில் வந்து கொண்டிருக்கும் பத்திரிகைகளில் இரண்டைத் தான் மிகத் தரமான பத்திரிகை என்று சொல்லலாம். ஒன்று 'மாத்ருபூமி', மற்றொன்று 'கலாகௌமுதி'. இரண்டுமே வாரப் பத்திரிகைகள். கதை, கட்டுரை, கவிதை, அரசியல் விமர்சனங்கள், சினிமா விமர்சனங்கள் ஆகியவற்றை இவை வெளியிடுகின்றன. தரமான வாசகர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ள பத்திரிகைகள் இவை. பல்வேறு நிலையிலுள்ள வாசகர்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, இவ்விதழ்கள் மிகத் தரமானவற்றோடு நடுத்தரமான விஷயங்களையும் இணைத்துத் தருகின்றன. தரமற்றவையே ஒருபோதும் வெளியிடுவதில்லை. (தமிழில் இன்று பிரபல பத்திரிகைகளில் இடம் பெறும் விஷயங்கள் அனைத்தும் இவை வெளியிடும் நடுத்தரமான விஷயங்களுக்கும் கீழ் நிலையில் உள்ளவையாகும்.) இன்று மலையாளத்தில் எழுதி வரும் தரமான எழுத்தாளர்களின் படைப்புகளை இப்பத்திரிகைகள் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றன. இப்பத்திரிகையைப் படிக்கும் ஒரு மலையாள வாசகன் கேரள, இந்திய, உலகத் தளத்தில் நடக்கும் முக்கியமான போக்குகள் பற்றியும் நிகழ்வுகள் பற்றியும் தெரிந்து கொள்ள முடியும். இப்பத்திரிகைகளில் ஒவ்வொரு விஷயமும் அறிவு பூர்வமாக அலசப்படுகிறது. இவற்றின் கூரான விமர்சனப் பார்வை அறிவார்ந்த வாசகர்களால் பெரிதும் வரவேற்கப்படுகிறது.

## சுந்தர ராமசாமி

FREE E - BOOKS , www.thamizham.net.,

தரமற்ற பத்திரிகைகளும் ஆபாச பத்திரிகைகளும் மஞ்சள் பத்திரிகைகளும் மலையாளத்தில் ஏராளம் இருக்கின்றன. இன்று பெரிய முதலீடுகள் கொண்ட ஒரு தொழில் இது. கோட்டயம் என்ற ஊரைச் சுற்றி தரமற்ற மஞ்சள் எழுத்துக்களை உருவாக்கும் தொழிற்சாலைகள் பல முளைத்து விட்டன; மேலும் முளைத்துக் கொண்டிருக்கின்றன. பொழுதுபோக்கு பத்திரிகைகள் என்ற பெயரில் பாலுணர்வைத் தூண்டி தங்கள் விற்பனையை பெருக்கிக் கொள்ளும் பத்திரிகைகள் இவை. 'மங்களம்' என்ற பத்திரிகை சுமார் 14½ லட்சம் பிரதிகள் விற்கிறது. இந்தியாவில் அதிகம் விற்பனையாகும் பத்திரிகை இதுதான். இது ஒரு பிரதி எட்டு வாசகர்களால் படிக்கப்படுவதாகவும் கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த தரத்தைச் சேர்ந்த 40, 50 பத்திரிகைகள் இன்று மலையாளத்தில் வந்து கொண்டிருக்கின்றன. மாணவர்கள், அரசாங்க அலுவலகங்களில் வேலை பார்க்கும் ஆண்கள், பெண்கள், தொழிலாளர்கள் இவர்கள் மத்தியில் இவ்வகைப் பத்திரிகைகள் ஏராளம் அழிந்து கொண்டிருக்கின்றன.

இடது சாரி இயக்கங்களும் மாணவர்களில் ஒரு பகுதியினரும் எழுத்தாளர்களில் ஒரு பிரிவும் தரமற்ற வணிகப் பத்திரிகைகளுக்கு எதிராக இப்போது அங்கு ஒரு இயக்கத்தை உருவாக்கி கொண்டிருக்கிறார்கள். இப்பத்திரிகைகளில் வெளியிடும் எழுத்துக்களை 'பைங்கிளி இலக்கியம்' என்று அழைத்து அதனை கேலிக்கும் விமர்சனத்துக்கும் உள்ளாக்கிக் கொண்டிருக்கிறார்கள். கேரளாவில் உள்ள முக்கியமான ஊர்களில் இப்பத்திரிகைகளை மாணவர்கள் எரித்தனர்.

ஆனால், இப்பத்திரிகைளில் எழுதப்படும் எழுத்தாளர்களுக்கு அங்கு சமூக கௌரவம் இல்லை. தமிழ் நாட்டைப் போல் அங்கு இவர்கள் தங்களை கலாச்சாரத் தூண்களாக காட்டிக்கொள்ள முடியாது. இலக்கிய இயக்கங்களில் இவர்கள் எவ்வித பங்கும் பெற முடிவதில்லை. எழுத்தாளர் மகாநாடுகள் இவர்களை கௌரவிப்பதில்லை. அரசாங்க நிறுவனங்கள், வானொலி, டி.வி போன்ற வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் இவர்களுக்கு எவ்வித கௌரவமும் அளிப்பதில்லை. கேரள சாகித்ய அகாடமியின் பரிசுகளை இவர்கள் பெற முடியாது. பாட புத்தகங்களில் இவர்கள் எழுத்து எதுவும் இன்று →

FREE E - BOOKS , www.thamizham.net.,

# மூன்றாம் உலக நாடுகள்

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் காலனி ஆதிக்கத்திலிருந்து ஒரு நூற்றுக்கும் அதிகமான நாடுகள் விடுதலை பெற்றன இந்த நாடுகளில் ஏற்பட்ட வறட்சி, வெள்ளம், பூகம்பம், அகதிகள் பிரச்சனை, போர்வெறி, பொருளாதார குழப்பங்கள், அறிவியல் போட்டி, கலாசார மாற்றங்களின் வாயிலாக பல இன்னல்களை சந்திக்க வேண்டியுள்ளது. வறிய மற்றும் வளரும் நாடுகளின் இத்தகைய சூழலை முன்னேறிய நாடுகள் பயன்படுத்திச் சுரண்டுகின்றன.

விடுதலை அடைத்துவிட்டதாக மூன்றாம் உலக நாடுகள் கூறிக் கொண்டாலும் பொருளாதார, சமூக, கலாச்சார துறைகளில் இன்னமும் பழைய முதலாளிகளிடத்தில் அடிமையாகவே வளரும் நாடுகள் உள்ளன. மூலப் பொருள்கள், உழைக்கும் சக்தி, இயற்கை வள ஆதாரங்களை (RESOURDCES) நிரம்பவே பெற்றிருந்தும் வல்லரசுகளிடம் தமதுநலனை அடகு வைக்கும் போக்கு கடந்த 40 ஆண்டுகளாக தொடர்கதையாகவே உள்ளது.

ஆதிபத்திய நாடுகளின் ரகசிய புலனாய்வுத் துறையினரின் ஊடுறுவலால் மூன்றாம் உலக நாடுகளின் அரசுகள் எந்நேரமும் ஆட்சிக் கவிழ்ப்பு அபாயங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கின்றன. வளநாடுகளின் தொடர்பைத் துண்டித்து விட்டு தாங்களாகவே சுயமாகக் கொள்கைகளை வகுத்துக் கொள்ள மூன்றாம் உலக நாடுகள் அனுமதிக்கப் படுவதில்லை.

முன்னேறிய நாடுகளுக்குச் செலுத்தப்படும் வளரும் நாடுகளின் வருடாந்தர வட்டி 1970ஆம் ஆண்டில் 2500 கோடியாக இருந்தது. 1981 ஆம் ஆண்டிலோ 51000 கோடியாக உயர்ந்து உள்ளது. இன்றைய உலகின் விலைவாசி உயர்விற்கே முன்னேறிய நாடுகள்தான் பெரும் காரணமாகும். பன்னாட்டு நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் 750000 கோடி ரூபாய் மதிப்பு உள்ள ராணுவ சம்மந்தப்பட்ட பொருள்களால் விலைவாசி கணிசமாக உயர வாய்ப்பிருக்கிறது.

FREE E - BOOKS , www.thamizham.net.,

பசிக்கொடுமையால் வாடினாலும் உலகில் பிடிக்கப்படும 30%- மீன்கள் வளநாடுகளின் கால்நடைத்தீனியாக மாற்றப் படுகிறது. உலகில் உற்பத்தியாகும் மூன்றில் இரண்டுபங்கு கனிமங்களின் (minerals) பயனை செல்வ நாடுகளே அனுப விக்கின்றன. ஸ்விஸ் நாட்டு வங்கிகளில் மட்டும் வளரும் நாடுகளின் உடைமையான 82000 கோடி பிராங்க் முடக்கப் பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகளின் கல்வி சமூக மற்றும் கலாசார அமைப்பு (unesco), சர்வதேச உழைப்பாளி அமைப்பு (ilo), ஐக்கிய நாடு களின் வணிக மற்றும் அபிவிருத்தி மாநாடு (unctad) போன்ற சர்வதேச நிறுவனங்கள் இந்நிலைகளுக்காகக் குரல் கொடுப் பதுண்டு. அப்பொழுதெல்லாம் அந்நிறுவனங்களின் உறுப்பி- னர் பதவியிலிருந்து விலகி நன்கொடை, உதவி நிதியினை நிறுத்திவிடுவதாக மிரட்டிப் பணிய வைப்பது வல்லரசுகளின் வாடிக்கையாகும்

— சமரசம்


## கட்டி சந்தா

கட்டி சந்தா: 12 இதழ்கள் அஞ்சலில் பெற ரூ 7.00 பணவிடை செய்யுங்கள்.

## முன் இதழ்கள்

கட்டி முன் இதழ்கள் எண்: 1 முதல் 11, 14, 23, 27, 30, 31 தவிர பிற இதழ்கள் யாவும் கிடைக்கும்.

இதழுக்கு 45 காசு விதம் அஞ்சல் தலை/பணவிடை அனுப்பினால் அஞ்சலில் உங்களுக்கு வந்து சேரும்.

50 வது இதழ் 0-75 காசு.

எல்லாத் தொடர்புகளுக்கும்: "கட்டி", 1494, அண்ணாநகர், சென்னை 600 040

கட்டி இலவசம்: கட்டியைக் கேள்விப படாத, விரும்பி ஏற்கக் கூடிய நண்பர் களின் முகவரிகளை அனுபபுங்கள். அவர் களுக்கு உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனு...

கட்டி ஒழுங்காக வந்து சேருவதில்லை என்று சில சந்தாதாரர்கள் மௌனமாகக் குறைபட்டுப் பயனில்லை. என்ன முயற்சி எடுத்தும் சில கட்டி இதழ்கள் அஞ்சலில் திருடப்படுவது தவிர்க்க முடியாதிருக் கிறது. சந்தா முடிய காலமிருந்தும் 15 ஆம் தேதிக்குள் கட்டி கிடைக்கப் பெற சந்தாதாரர்கள் சந்தா எண் குறிப்பிட்டு (மறந்தால், பெயர் முகவரி) எழுதினால் மீண்டும் ஒரு முறை அனுப்புகிறோம். வேறு வழியில்லை


FREE E - BOOKS , www.thamizham.net.,

வேலை பார்க்கும் பெண்களின் குழந்தைகள் பள்ளிப் படிப்பில் ஆர்வம் காட்டுகின்றன என்பதை ஏற்றுக் கொள்கிறேன். சிந்தனையைத் தூண்டும் வகையில் அமைந்திருந் சிறந்த படைப்பு 'என்னோட வீடும்' சிறுகதை.

—பி. எல். பரமசிவம், பாம்பன் ரோடு

'மாநிலங்களின் தனிநபர் வருமானம்' பற்றிய புள்ளி விபரங்களை தந்த நீங்கள், அது ஆறு மாதத்திற்கா ஒரு வருடத்திற்கா என்று குறிப்பிட மறந்துவிட்டீர்களே...! (ஒரு வருடத்திற்கு— ஆசிரியர்குழு)

—காழி. க. அருள்மொழி, 609 116

இதழில் இமயமாய் உயர்ந்து நிற்பது எழுத்தாளர் 'சுந்தர ராமசாமி' அவர்களின் கலை இலக்கியம் பற்றின கண்ணோட்டம் தான்.

—இராஜாதி, வண்டலூர்

வேலை கிடைக்க 300 வருடங்கள் என்று போட்டு வேலை இல்லாமல் இருப்பவர்களின் வேதனையை அதிகமாக்கி விட்டீர்களே!

விரிப்பு

—செல்வி. தாமரை, சென்னை

அன்புள்ள அல்லியின் தரம்கெட்ட பதில்களை ஒரு குடும்ப பத்திரிகையில் போடுகிறார்கள் (அதென்ன குடும்ப பத்திரிகையா?)

—செ. மதுக்குமார், மதுரை-625 001.

மாநில சுயாட்சி, இந்தி எதிர்ப்பு, மதுவிலக்கு, ஊழல் ஒழிப்பு என்று தமாஷாக பேசாமல், கலை, சரித்திரம் என்று போரடித்த அந்த கின்னஸ் சாதனையாளரை கட்சியில் சேர்த்து கொள்ள திராவிட இயக்கத்தினருக்குப் பைத்தியமா?

—லேனாவாணன், ஐதராபாத்

'மெரீனா முதல் குமரி வரை மீனவர்கள்' தொடர்கட்டுரை மீனவர்களின் பணியில் ஏற்படுகின்ற ஆபத்துக்களையும், விளையும் தொல்லைகளையும் துயரங்களையும் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டியது.

—க. இளங்கோ, சீர்காழி

சென்ற இதழில் வெளியான புதுக்கவிதைகள் திரும்பத் திரும்ப படிக்கத் தூண்டின. 'புதிய கல்விக் கொள்கை' விற்பனைக்குத் தயார் இரு கவிதைகளும் மிகப் பிரமாதம்.

திருமதி. சுகுணா மதுரை மூர்த்தி, மதுரை

FREE E-BOOKS , www.thamizham.net.,

பாரத பிரதமர் ராஜீவ் காந்தியை சுடமுயற்சித்ததைப் பற்றி பத்திரிகைகள் பல பரபரத்துக் கொண்டிருக்கின்றன. இதனிடையில் ஓர் உறுத்தல் நம் உள்ளத்தில் ஊடுறுவுகிறது. உண்மையில் இது உண்மை நிகழ்ச்சியா? —என்ற வினாவெழுகிறது.

'காந்தி சமாதியின் உள்நுழைந்து ஒரு வாரமாக காத்திருந்தேன்' என்று கொலையாளி வாக்குமூலம் வழங்குகிறான். அதே நேரம் ஒரு வாரம் காத்திருக்கும் அவன் ஒரு பொம்மைத் துப்பாககியையா உபயோகப்படுத்துவான்? இங்குதான் இடறுகிறது நமக்கு.

பிரதமரைக் காப்பதற்கு என்று பிரத்யேக பாதுகாப்புப் படையாக 'கறுப்புப் பூனைகள்' என்ற அமைப்புடன் போலீஸ் துறையின் பாதுகாப்புப் படை வேறு. இந்நிலையில் ஒருவன் காந்தி சமாதிக்குள் ஊடுறுவது என்பது உண்மைக்குப் புறம்பானது. இதனிடையில் இரண்டுமுறை வெடிச் சத்தம் கேட்டும் பாதுகாப்புப் படையினர் 'அமைதி' காத்திருக்கின்றனர். வெடிச் சத்தம் விழவில்லையென்றால் அது போலியானது. ஏனென்றால் காந்தி பிறந்தநாளுக்காக அஞ்சலி செலுத்தும் போது அங்கு ஓர் அசாத்தியமான அமைதி நிலவியிருக்கும்.

# சில சந்தேகங்கள்

'கறுப்புப் பூனைகள்' கூட வெளியில்தான் காவல் காத்து கொண்டிருந்தார்களாம். பிரதமரைச் சுற்றியே இருக்க வேண்டிய கறுப்புப் பூனைகள் வெளியில் நின்று கொண்டிருக்க வேண்டிய விஷேசம் என்னவென்று புரியவில்லை. கைது செய்யப்பட்டவன் முதலில் பைத்தியம்போல் பதிலளித்திருக்கிறான். போலீஸ் விசாரணைக்குப் பின் பைத்தியம் தெளிந்தவனாக பேச ஆரம்பித்திருக்கிறான். ராஜீவை சுடுவதற்காகவே புதருக்குள் மறைந்திருந்தானாம். புதர் மண்டிப்போகும் அளவிற்கு காந்தி சமாதி ஆனதேன்! இதையெல்லாம் பார்க்கும் போது நமக்கு இயல்பான சந்தேகம் ஏற்படுகிறது. இந்நிகழ்ச்சிகள் நிஜந்தானா? இல்லை, மக்களை திசை திருப்ப நடத்தும் முயற்சியா?

- தெய்வம்

FREE E - BOOKS , www.thamizham.net.,

அகிலன் அவர்கள் எழுதி இதற்குமுன் நூலுருவம் பெறாத கட்டுரைகளின் தொகுப்பு. சி. சு. செல்லப்பா அவர்களுக்கு இவர் எழுதிய பதில்கட்டுரை நல்ல விவாதமாக இருக்கிறது. 'நாவல் புதிய உத்திகள்' கட்டுரையில் நாவலை நன்கு ஆய்கிறார். 'தமிழ் இலக்கியத்தில் அக்டோபர் புரட்சியின் செல்வாக்கு' கட்டுரைத் தலைப்பு ஆழமானது. ஆனால் கட்டுரை கனமில்லை. ஆழ்ந்த விமர்சனமாக இராமல் படைப்பைப் போல் இருப்பதனால் கட்டுரைகள படிப்பதற்கு சுவையாய் இருக்கிறது.

## புத்தகப் பிழிவு

இதிலிருந்து...

● மேனாடுகள் பலவற்றில் நாவல்களும் நாடகங்களும் எழுதப்பெற்ற பின்னரே சிறுகதைகள் தோன்றத் தொடங்கின. நாமோ நேருக்கு மாறான முறையில் எடுத்த எடுப்பிலேயே சிறுகதைகள் எழுத முன்வந்தோம்.

● எழுத்தாளன் ஒழுக்கத்தை வலியுறுத்தும் உபதேசியல்லன். எனினும் அவன் ஒழுக்கக்கோட்டை வர்ணனை செய்யும் ஊதாரியுமல்லன்.

● கதைகள் எழுதுவது எளிதான செயலன்று. ஒவ்வொரு சிறந்த சிறுகதையும் ஒரு கவிதைத் துணுக்கு. (LYRIC)

● கூடுமானவரையில் தனித்தமிழில் எழுத வேண்டும் என்கிற ஆவல் எப்போதும் எனக்குண்டு. சொற்களை வலிந்து தேடிப் பிடித்து செயற்கை நடை ஏற்படுத்திக் கொள்ளும் வழக்கம் எந்த எழுத்தாளருக்கும் கூடாது



● எழுத்தாளர்களே! உங்கள் பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கையைக் கூர்ந்து கவனியுங்கள். அவர்களது அடிப்படைப் பிரச்சனைகளைத் தெரிந்து கொள்ள முயற்சியெடுத்துக் கொள்ளுங்கள் இந்த அடிப்படைப் பிரச்சனைகளுக்கு மூல காரணங்கள் என்னவென்று ஆராய்ந்து பாருங்கள். இவைதான் உங்கள் கதைகளுககு மூலப் பொருளாக இருக்க வேண்டும். வாழ்க்கையைவிட—மனிதர்களைவிட கதைக்கு மூலப் பொருள் வேறு எதுவும் இருக்க முடியாது.

FREE E - BOOKS , www.thamizham.net.,



# பெரியாருக்கு வ.உ.சி. [illegible]

இளமையிலேயே வசதிமிக்க குடும்பத்தவரான வ. உ. சி. அவர்கள், விடுதலைப் போரில் பங்கேற்று, சிறையில் செக்கிழுக்கும் அளவுக்குத் துன்புறுத்தப்பட்டார். அது மட்டுமல்ல; சிறை மீண்ட பின்பும்கூட அவர் வாழ்க்கை வறுமைப்பாட்டையிலேயே செல்வதாயமைந்தது. தந்தை பெரியாருககு

அந்நாளில் வ.உ.சி. எழுதிய கடிதமொன்று ஈரோட்டில் உள்ள பெரியார் நினைவகத்தில்


பசியால்
'அம்மா... தாயே'யென்று
ஆயிரமாயிரம் மன்னர்கள்
திருவோடுகளை நீட்டு
கிறார்கள்...

பிரதமர்—
இந்தியை போடுகிறாரே...!
—இரண்டாம் நக்கீரன்

பாடத்திட்டம்
உடைந்துபோன
முட்டைகளை

FREE E -BOOKS , www.thamizham.net.,

நாட்டுக்குழைத்த அவரது துன்ப வாழ்வைப் பிரதிபலிப்பதாக உள்ள - 'லெட்டர் ஹெட்' டில் எழுதப்பட்டுள்ள அந்தக் கடிதம் வருமாறு:




அடைகாக்கிறது.
அது—
மாணவர்களின்
வானத்தைச்
சின்னஞ்சிறு
தீப்பெட்டிக்குள்
திணிக்கிறது

—பிருந்தாசாரதி

வெள்ளை பூசிக்கொண்ட
வீட்டுச்சுவர்
தன்னை விளம்பரப்படுத்திக்
கொண்டது :
'விளம்பரம் செய்யாதே'

—இரா. மயில்சாமி

### சகுனம்

ஒரு
சுப காரியத்திற்காக,
வீட்டை விட்டுப் புறப்பட்ட
வர்
உடன்
உள்ளே ஓடி வந்துவிட்டார்.
'வேலை வாய்ப்பு அதிகாரி
வீதியின் குறுக்கே போனா
னாம்!'

—கோவை கிருபாகரன்

புல் வண்டியை
இழுத்துச் சென்றது
மாடு
—ஒட்டிய வயிறோடு

—முத்தழகன்

ஏந்திய கையை நிராகரித்த
நாணயம் விழுந்தது
எடை பார்க்கும் இயந்திரத்
தில்

—தங்கம் மூர்த்தி

# ஒரு நெடுநாள் வாசகரின் மனக்குமுறல்

''சுட்டி critical ஆக இருப்பதை விட creative ஆக இருப்பதையே விரும்புகிறேன்.

இந்த ஊழலும் ஆணவமும் அலட்சியமும் முட்டாள் தனமும் எந்த சமுதாய அமைப்பிலும் மாறப்போவதே இல்லை. இக்கரைக்கு அக்கரை பச்சை தான்.

தமிழகப் பத்திரிகைகளைப் பார்க்கையில் தெருச் சண்டைக்கும் அரசியலுக்கும் எனக்கு வித்தியாசம் தெரியவில்லை. இதில் நீங்களும் இறங்க வேண்டாம்.

இந்த அரசியல் வாதிகளைப் பற்றி எண்ணுவதும் எழுதுவது கூட பாவம் இவர்கள் எல்லாம் மனநோயாளி இந்த வக்கிரங்களைப் பற்றி எழுதி மனோவிகாரம் அடையக் கூடாது. முற்போக்கு வாதியிலிருந்து மொழிப்போக்குவாதி வரை அனைவரும் ஒன்று தான்.

சமுதாய அமைப்பு மாறினால் எல்லாம சரியாகி விடும் என்று கிளிப்பிள்ளை மாதிரி எழுதிக் கொண்டிருக்காதீர்கள். எனக்குத் தெரிந்து இந்த வினாடிவரை உலகின் எந்த மூலையிலும் அப்படி ஒரு விஷயம் நடந்ததே இல்லை.

இதையெல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டு ஆயிரம் நஷ்டம் வந்தாலும் 500 வாசகர்கள் இருந்தாலும் ஆக்கப்பூர்வமாக என்ன செய்ய முடியும் என்று எழுதுங்கள். அதற்கான ஒரு சுற்றறிக்கையாக— கடிதமாகக் கூட சுட்டி சுருங்கலாம்.

நமக்கு இப்போது அறிவியல் தொழில்நுட்பம், அறிவு உழைப்பு ஒற்றுமை தான் தேவை. மொழி, அறிவு, கல்வி, கலை உடல் நலம், உணவு, பொழுதுபோக்கு என்று பலதுறைகளில் பங்காற்ற கடும் தேவை காத்திருக்கிறது. சுட்டி பங்காற்றியாக வேண்டும். இங்கிருந்து தொடங்க...''

[வாசகர்களிடம் தன் பெயரை வெளியிட வேண்டாமென்று கேட்டுக் கொண்ட இந்த அன்பரின் சிந்தனையின் எதிரொலியை வாசகர்களிடமிருந்து எதிர்நோக்குகிறோம்.)

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சிறைச்சாலைகள்

இந்தியாவில் சிறைச்சாலைகள் நிறைய இருக்கின்றன. ஆனால், சிறைச்சாலைகளாக இல்லை. குற்றவாளிகளை தண்டிக்கவும், திருத்தவும் பயன்பட வேண்டியவைதான் சிறைச் சாலைகள். இன்றோ குற்றங்களின் கூடாரமாக ஆகிவிட்டது. வேண்டாதவர்களை உள்ளே தள்ளவும், அரசியல் ரீதியில் பழி வாங்கவும் பலர் பயன்படுத்திக் கொள்கிறார்கள். மோச மான நிலைக்கு எடுத்துக்காட்டுகள் சில :

✷ 'பெண் கைதிகளின் லாக்அப் அறையை கற்பழிப்பு அறையின் இணைப்பு என்று கூறலாம்?' —இப்படி கூறுபவர் முன்னாள் சுப்ரீம் கோர்ட் நீதிபதி வி. ஆர். கிருஷ்ணய்யர்.

✷ 'நரகத்தைவிட மிகவும் மோசமான இடம் இது' —இப்படி கூறுபவர்கள் கைதிகள்.

✷ துணை ஜெயில்களில் (SUB JAIL) 3 பேர் கூட தங்க முடியாத அறைகளில் 15 பேருக்குமேல் அடைக்கப்படுகிறார்கள்.

✷ 400 கைதிகள் தங்கவேண்டிய கொட்டடிகளில் அடைந்திருப்பவர்கள் 857 கைதிகள்.

✷ சிறைச் சாலைகளில் வழங்கப்படும் உணவு பொருட்கள் சுகாதாரமான முறைப்படி தயாரிக்கப்படுவதில்லை. உணவு பொருட்கள் அழுகிய நிலையில் இருந்ததால் சமீபத்தில் ஒரு சிறையில் நோயினால் 4 பேர் இறந்து விட்டனர்.

✷ சில பணக்கார கைதிகள் நல்ல நிலையில் இருந்தாலும் உடல்நிலை சரியில்லை என்றுகூறி ஆஸ்பத்திரிகளில் இடம் பிடித்து விடுகிறார்கள்.

✷ ஏழைக் கைதிகளுக்கு போதிய மருத்துவக்கண்காணிப்பு இல்லை. கவனிப்பிலலை. பலர் சிறைச்சாலைக்கு வெளியே மருந்துகள் வாங்கி சாப்பிடுகின்றனர்.

✷ தொழு நோயாளிகளையும், தொற்று நோய்க்காரர்களையும் ஒன்றாக படுக்கவைப்பதன்மூலம் வியாதி பரவல் மிகத் தீவிரமடைகிறது.

FREE E - BOOKS , www.thamizham.net.,

✷ மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கைதிகளுக்கு துணிகள் வழங்கப்பட வேண்டுமாம். அதற்காக அரசு ஒரு தினத்துக்கு 12 பைசா கைதிக்குச் செலவிடுகிறது (மூன்று மாதங்களுக்கு ரூ 10-80). இப்போது துணிகள் சரிவர வழங்கப்படுவதில்லை.

✷ பல கைதிகள் போலீஸ்காரர்கள், மற்றும் சிறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் உடைகளை துவைக்கும் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

சிறைக் கைதிகளின் பிரச்சனைகள் பற்றி அரசியல் கட்சிகளுக்கு அக்கறையில்லை. ஏனெனில் . அரசியல் கைதிகள் பெரும்பாலும் நன்றாக நடத்தப் பெறுகிறார்கள் (மற்ற குற்றவாளிகளை ஒப்பிடு செய்கையில்) தலைவர்களுக்கோ அரச உபசாரம் நடைபெறுகிறது. தலைவர்களின் வீட்டைவிட வசதி செய்துத் தரப்படுகிறது. எனவே அவர்கள் கண்டு கொள்வதில்லை. சிறைக்கைதிகள் உண்ணாவிரதமிருந்தாலோ, போராட்டம் நடத்தினாலோ அவை ஒடுக்கப்படுகின்றன. பத்திரிகைகளில் வெளி வருவதில்லை. எனவே, அந்தந்த பகுதி மக்கள் ஒன்றிணைந்து சிறைச்சாலைகளுக்குச் சென்று கண்காணிப்பதன் மூலம் கைதிகளுக்கு நியாயம் கிடைக்க வழி செய்யலாம்.


—எ. ஜெ. சூர்யா

## மருந்துகளுக்கே வியாதியா?

இந்தியாவின் சூழ்நிலைகளுக்கு சுமார். 200 வகையான அத்தியாவசிய மருந்துகள் போதுமானவை என்று கணக்கிடப்பட்டும், பன்னாட்டு கம்பெனிகள் 60,000த்துக்கும் அதிகமான மருந்து வகைகளை தேவையின்றி தயார் செய்து இந்திய மக்கள் மீது திணிக்கின்றனர். இப்படியே போனால் மருந்துகளே வியாதிகளை உற்பத்தி செய்ய ஆரம்பித்து விடப் போகின்றன.

இலவசம்! ஆம். இலவச பேனா நட்புப் பெறவும், உங்கள் கவிதை, புகைப்படம் நூலில் வெளி வரவும் 5 x 30 ஸ்டாம்பு அனுப்புக: இராஜாதி, புது ஒட்டேரி சென்னை-600 048.

FREE E - BOOKS , www.thamizham.net.,




ஆசிரியர்: கு.நாராயண பாரதி, வெளியிடுபவர்: கி.ராமச்சந்திரன் 494, அண்ணா நகர், சென்னை-600040. அச்சிடுவோர்: எம்.எஸ். ரவீந்திரன், ரவீந்திரன் பிரஸ், 137 டாக்டர் நடேசன் ரோடு, சென்னை-5.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# கூவம்

✷ 'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்பார்கள். கூவம், அடையாறு, பக்கிங்காம் என்று மூன்று ஆறுகள் இருப்பதனால் தான் சென்னை நகரே பாழாகிவருகிறது.

✷ ஒரு காலத்தில் கல்வி வள்ளல் பச்சையப்பர் கூவத்தில் குளித்துவிட்டு சென்ன மல்லீசுவரர் கடவுளை வணங்கினாராம் இன்று நகரின் அழகைக் கெடுப்பதுடன் சாக்கடை நீரும் கழிவும் கலந்து நாற்றத்தின் உறைவிடமாக விளங்கி,பழம் பெருமையை அழித்துக் கொண்டது கூவம்.

✷ கூவத்தின் நதிமூலம் (சாக்கடைமூலம்) சென்னைக்கு மேற்கே 65 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள சத்தரை கிராமம். இந்த 65 கி.மீ. ஆற்றை பலரும் அசுத்தப்படுத்தவே பயன்படுத்து கின்றனர்.

✷ கூவம் கடலுடன் சேருமிடத்தில் மணல்மேடு உருவா வதால் கூவம் நீர் தேங்கிவிடுகிறது. ஆண்டு தோறும் தோராயமாக 10 லட்சம் டன் மணல் மேடிடுகிறது.

✷. இருக்கிற நாற்றம் போதாதென்று நுங்கம்பாக்கம் அருகே இறந்த மாடுகளின் சடலங்களும் கூவத்தோடு சேர்ந்து அழுகி நாற்றமெடுக்கின்றன.

இதற்கு என்ன செய்வது?

கூவம் மணக்கப் போகிறது என்று வண்ணமயமான வாக்குறுதிகளை அளித்து மக்களை ஏமாற்றவேண்டாம். உடனடி செயல்தான் முக்கியம். கூவம் ஆற்றில் கடல் நீரை மேலேற்றி சுத்தம் செய்ய வேண்டும். சென்னைக்கு கூவம் வருவதற்கு முன்பு கோயம்பேடு கிராமம் வழியாக வருகிறது. கோயம்பேடு பகுதியில் உள்ள நிலத்தடி நீரை எடுத்துக் கூவம் ஆற்றில் விடவேண்டும். ஆற்றின் இரு கரைகளிலும் இருக்கும் குடிசைகளை காலி செய்து அவர்களுக்கு சுகாதாரமான இடத் தில் வாழ்வதற்கான வசதிகள் செய்துத் தரவேண்டும். கூவம் ஆற்றின் தண்ணீரை சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்த வகையில் வடிகட்டி பயன்படுத்துமாறு விஞ்ஞான பூர்வமான நடவடிக்கை கள் மேற்கொள்ள வேண்டும்.

கூவம் - சில தகவல்கள் கூவம் - சில தகவல்கள் கூவம் - சில தகவல்கள்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# குமுறல்

நான் பம்மல் மீனாட்சி கிருஷ்ணன் பாலிடெக்னிக்கலில் 2ஆம் வருடம் எலக்டரானிக்ஸ் கம்யூனிகேஷன் பயின்று வருகிறேன். 24—08—86 அன்று ஞாயிறுமாலை எனது நண்பர் வீட்டுக்குச் சென்றேன். இரவு தாமதமாகி விட்டதால் கடைசி பேருந்தை தவறவிட்டேன். ஒரு லாரியின் மூலம் பல்லாவரம் வந்து சேர்ந்தேன். வெகுநேரம் நின்றும் 18A வரவில்லை. பிறகு ஒரு பெரியார் பேருந்தில் ஏறி பயணச்சீட்டும் வாங்கி விட்டேன். அந்த பஸ்ஸில் என்னருகே எனக்கு யாரென்று தெரியாத ஒருவன் நின்றிருந்தான். அவனிடம் பயணச்சீட்டிற்கு தேவையான பணமில்லை. நடத்துனர் அவனிடம் டிக்கெட்டுக்கு பணம் கேட்டார். அவனோ என்னைக் கொடுக்கச் சொன்னான். 'நான் ஏன் தரவேண்டும்?' என்று அவனைக் கேட்டேன்.

அப்போது பஸ் மீனம்பாக்கம் வந்துவிட்டது. ஒரு ஸ்பீட் பிரேக்கர் வந்தவுடன் பஸ்ஸின் வேகம் குறைந்தது. அப்போது அவன் பஸ்ஸிலிருந்து கீழே குதித்து ஓடிவிட்டான். உடனே கண்டக்டரும் பஸ்ஸை நிறுத்தச் சொல்லி கீழே இறங்கி அவனைப் பிடிக்க ஓடிவிட்டார். அப்போது அந்த பஸ்ஸில் பயணம் செய்த மப்டி போலீஸ்காரர் எனது சட்டையைப் பிடித்து இழுத்தார் 'எதற்காக இழுக்கிறாய்? என்று கேட்டேன். 'பிரதர் நான் தண்ணியில் இருந்தாலும் ஸ்டடிதான்' என்று கூறி எனது சட்டை பாண்டை ஆராய்ந்து 'எவ்வளவு பணம் இருக்கிறது?' என்று கேட்டார். 'ஒன்றும் இல்லை' என்றேன்.

பஸ்ஸிலிருந்து என்னைக் கீழிறக்கினார். ரோட்டிலேயே என்னை அடி அடி என்று அடித்தார். அப்போது ரோட்டில் இருந்த பொதுமக்கள் 'ஏன் அடிக்கிறீர்கள்' என்று கேட்டனர் அவர்களையும் அடித்து விட்டார். அப்போது இன்னொரு போலீஸ்காரர் வந்து அவரிடம் விட்டுவிடுமாறு கேட்டார். 'அந்த போலீஸ்காரருக்கு என்ன மாமூல் கொடுத்தாய்' என்று வந்த போலீஸ் கேட்டு என்னை அடித்தார். 'ஸ்டேஷனுக்கு நான் அழைத்துச் செல்வேன். நான் என்ன சொன்னாலும் 'ஆமாம்'னு சொல்லனும். 'பிக்பாக்கெட் அடித்தாயா என்று கேட்பேன்' என்று போலீஸ் I கூறினார். நான் மறுத்தேன்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

காலேஜ் ஸ்டுடண்ட் என்று சொன்னேன். என்னுடைய ஐடென்டிடி கார்டை கசக்கி எறிந்தார். மீண்டும் அடித்தார். ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார். அங்குள்ள அதிகாரி யிடம் நான் பிக்பாக்கெட் அடித்தேன் என்று பொய் சொன் னார். நான் மறுத்தேன். பிறகு அங்கு உள்ள போலீஸ்காரர் ஒருவர் எனக்கு சப்போர்ட் செய்து பஸ்ஸுக்கு ரூ 2 கொடுத் தார். அந்த இரவில் பஸ்ஸே இல்லை. நடந்தே இராயப் பேட்டை வந்தேன் மாமூல் தராததுதான் நான் செய்த தவறு அதற்கு எனக்கு இந்த சித்ரவதையா?

குறிப்பு: என்னை பஸ்ஸிலிருந்து இறக்கியதும் கத்தியைக் காட்டி மிரட்டினார் அந்த போதையிலிருந்த மப்டி போலீஸ்

—பாதிக்கப்பட்டு குமுறியவர்: P. தர்மலிங்கம், சென்னை-14.

## புதிய தாக்குதல்

இலங்கையில் இனப்பிரச்சனையின் காரணமாக அமைதீ யின்மை நிலவுவதால் மிகவும் கடுமையான நிதிநிலை பற்றா குறை ஏற்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டில் மிகவும் சிரமமாக இருக்கும். இலங்கையில் பாதுகாப்பு செலவுகள் அதிகமாகி விட்டன. சுற்றுலா துறை மூலம் வரும் வருமானங்கள் போய் விட்டன. தேயிலை, ரப்பர், தேங்காய், ஏற்றுமதிகள் குறைந்து விட்டன. நிதி நெருக்கடிகளுக்கு இவை பெருங்காரணங் களாகும்


"இலங்கையில் அமைதியின்மை நீங்கினாலன்றி உதவிகள் குறைக்கப்படும்," இது உலக வங்கியின் எச்சரிக்கை. ஜெய வர்த்தனேவுக்கு விடுதலைப் புலிகளின் ஆயுதத் தாக்குதலைவிட இது அதிகமாக பாதித்திருக்கிறது.

## உடனே செய்யுங்கள்...

தமிழகத்தில் நிலச்சீர்திருத்தச் சட்டத்தை முறையாக அமுல் படுத்தினால் 20 லட்சம் ஏக்கர் உபரி நிலம் கிடைக்கும்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# காற்று அசுத்தமானது!



காரோ, கறுப்புப்பணமோ வைத்திருக்காத எவரும் உள்ளே நுழைந்துவிட இயலாத ஹோட்டல். கோலாகலமாக இருந்தது. நடிகை திவ்யாவின் 16வது பிறந்ததினம். கடந்த நான்கு வருடங்களாக தனது பதினாறாவது பிறந்ததினங்களைக் கொண்டாடி வருகிறாள். திவ்யாவுக்கு உடம்பைதான் மறைக்க தெரியாது. பிறந்த வருடத்தை மறைத்து விடுவாள்.

ஹாலுக்குள் மிகப்பெரிய புள்ளிகள் நின்றிருந்தனர். அவர்கள் இந்திய பிரஜை அல்ல என நிரூபிப்பதுபோல் மேல்நாட்டு மதுவகைகள், உடைகள், வழக்க பழக்கங்கள் பேசும் மொழி...

திவ்யா மேடையில் தோன்றினாள்.

அனைவரும் கைத்தட்டி காற்றை அசுத்தப்படுத்தினர்.

திவ்யாவிற்கு வாழ்த்துக்களை வழங்கினர்.

திடீரென்று விளக்குகள் நின்றன. திவ்யா சத்தம் போட்டாள். விளக்குகள் வந்தபோது அவள் அணிந்திருந்த நெக்லஸ் காணாமற்போயிருந்தது.

அந்த நெக்லஸின் மதிப்பு பத்து லட்சத்துக்கும் மேல். ஒரு தயாரிப்பாளர் இன்று காலைதான் பிறந்தநாள் பரிசாக அவளுக்கு அணிவித்திருந்தார். கூட்டம் பரபரப்பானது.


விழாவிற்கு வந்திருந்த உயர் போலீஸ் அதிகாரி ஒலிபெருக்கியில் அறிவித்தார்: "நண்பர்களே... நடந்துவிட்ட அசம்பாவிதத்திற்கு வருந்துகிறேன். திவ்யா அவர்கள் அணிந்திருந்து காணாமற்போன வைர நெக்லஸ் பத்து லட்சத்துக்கு மேல் பெறுமானமுள்ளது. ஹோட்டலின் வெளிக்கதவுகள் அடைக்கப்பட்டு விட்டன. அனைவரையும் சோதனை செய்வதென்று முடிவெடுத்திருக்கிறோம், இதற்காக உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். எனது கடமையைத் தான் செய்கிறேன்..."

FREE E - BOOKS , www.thamizham.net.,

அனைவரும் முகம் சுளித்தனர். கோபப்பட்டனர். அதிகாரியை கண்டபடி திட்டினர். சோதனை செய்யப்பட்டது. சில வேலைக்காரர்கள் அடி வாங்கினர். ஒரிருவர் மீது சந்தேகப்பட்டு விசாரித்தனர். ஹாலின் பல பகுதிகளும் பரிசோதிக்கப்பட்டன. கிடைக்கவில்லை.

பார்க்கப்போனால், சோதனை செய்யப்படாத இடமே இல்லை— அந்த உயர் போலீஸ் அதிகாரியின் பாண்ட் பாக்கெட்டைத் தவிர. ஏனெனில்...

—நா. தென்னிலவன்



மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப போக்குவரத்து சாதனங்களை அதிகப்படுத்தா விட்டால், பேருந்தின் உள்ளே பயணம் செய்பவர்களைவிட, வெளியே பயணம் செய்பவர்களின் தொகை அதிகமாகிவிடும்.

அட்டைப் படம்

**கவியுதிர் காலம் :** கவிதைத் தொகுப்பு (6-00)
பகுத்தறிவுதாசன் M/s மரியம் பதிப்பகம், 6/9, திருவள்ளுவர் நகர், நாஞ்சிக் கோட்டை சாலை, தஞ்சாவூர்-613 006.

**முதுமையிலும் இளமையாய் இருப்பது எப்படி?**
(8 00) மலேஷியா வைத்தியநாதன்

**எண்ணங்கள் என்னுடையவை :**
கட்டுரைத் தொகுப்பு (10-00) ஜோதிர்லதா கிரிஜா

**வல்லிக்கண்ணனின்-போராட்டங்கள் :** (6-75)
**வெற்றியின் ரகசியம் :** கட்டுரைகள் (5-25)
தமிழினியன்-மேற்கண்ட நான்கு நூல்களும் வெளியீடு :
M/s இமயப்பதிப்பகம், 20, பெருமாள் தெற்கு வீதி,
நாகப்பட்டினம்-611 001.

FREE E - BOOKS , www.thamizham.net.,

**நினைவுக்கலை ஏந்தல் திருக்குறள்**
**பெ. இராமையா பதின்கவனகர் (தசாவதானி)**
**வரலாற்று மலர், இரங்கல் மலர் வெளியீடு :**
*தசாவதானி இராமையா நூல் வெளியீட்டுக்குழு*
1A1, *கருணாநிதி நகர், கோவில்பட்டி*-627 701.
**மகாத்மா காந்தி பொன் மொழிகள் :** (5-00)
*தொகுப்பு , அரு. ராமநாதன், பிரேமா பிரசுரம்,*
35. *ஆற்காடு சாலை, சென்னை*-600 024.
**வர்ணாஸ்ரமம் :** (3-00) *அறிஞர் அண்ணா*
M/s *பாரி நிலையம்,* 184, *பிராட்வே, சென்னை*-600 108.
**கிராமப் பொருளாதாரம் :** (1-25)
*இ. டி. சிதம்பரம்,* M/s *ஸ்டார் பிரசுரம்,* 72, *பெரிய தெரு,*
*திருவல்லிக்கேணி, சென்னை*-600 005.
**வாழ்வளிக்கும் கல்வி :** (3-50) *சக்தி சீனிவாசன்*
M/s *அல்லயன்ஸ் கம்பெனி, த. பெ.* 617, *மயிலாப்பூர்,*
*சென்னை*-600 004.

# எமக்கு வந்தவை

**உயரமாக வளருவது எப்படி?** (4-50)
*தமிழ்நாடு பதிப்பக ஆசிரியர் குழு, தமிழ்நாடு பதிப்பகம்,*
36-3, *சரோஜினி. தெரு, தி நகர், சென்னை*-600 017.
**கண்கள் தமிழ்மலர் :** *ஆசிரியர் : கதிர்மணியன்* B.com.
474, *காமராஜ் ரோடு, திருப்பூர்*-638 604, *தனியிதழ் ரூ* 1-00.
**தேசத்திற்கு ஓர் அறை கூவல் :**
*பாசிச எதிர்ப்பு தேசிய மாநாட்டு சிறப்பு மலர்,*
P. V. *இராமனுஜம், பொதுச் செயலாளர், மக்கள் உரிமைக்*
*கழகம்,* 22, *லேக் ஏரியா,* 5*வது குறுக்குத் தெரு,*
*சென்னை*-600 034. *விலை ரூ* 15-00
**புதிய விழிப்பு :** *கட்டுரைகள்* (8-00)
*அகிலன்* M s *தமிழ்ப் புத்தகாலயம்,* 58, *டி. பி. கோயில் தெரு,*
*திருவல்லிக்கேணி, விவேகானந்தர் இல்லம், சென்னை*-600 005


FREE E - BOOKS , www.thamizham.net.,

கட்டு மரத் தீவு

Regd. No. TN/MS(N)/317

Licensed to post without prepayment   Licence No. TN/MS(N)WPP-56

http://www.thamizham.net FREE E - BOOKS (TAMIL)



# Sakthi Sugars Limited

## A PACESETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distributing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development programmes (I) Sakthi High Schocl Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Technology promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018

Reg. Office & Factory.
Sakthinagar-638 315.
Periyar District.

FREE E - BOOKS , www.thamizham.net.,